ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1873/16 - 2014 ජූලි මස 30 වැනි බදාදා - 2014.07.30

*1873/16 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2014, யூலை 30.*

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் 2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகத் (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படுவதன் மேல் வலுக்கு வருதலும் வேண்டும்.

2. 2003 ஆம் ஆண்டு திசெம்பர் 3 ஆந் திகதிய 1317/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டு ஏப்பிறல் 10 ஆந் திகதிய 83/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) 6 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"6. நிறுவகத்தின் அலுவலர்கள் பின்வருவோராதல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ;
(ஆ) பிரதிப் பணிப்பாளர் ; அத்துடன்
(இ) எந்தப் பதவியை வகிப்பவர் இப்பந்தியின் நோக்கத்துக்காக அலுவலரொருவராகவுள்ளாரோ அந்தப் பதவியாகவுள்ளதெனக் கட்டளைச் சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட வேறேதேனும் பதவியை வகிப்பவர்.".

(4) பத்தாம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :-

" 10. (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையானது நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக் குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்:-

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது:-

(அ) பணிப்பாளர் ;

(ஆ) பிரதிப் பணிப்பாளர் ;

(இ) உயர்கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(ஈ) சுகாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர்;

(உ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(ஊ) (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(எ) நிறுவகத்தின் நேர்முன்னரான கடந்தகாலப் பணிப்பாளர் ;

(ஏ) சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவ, மருத்துவ விஞ்ஞானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள், சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் என்ற எல்லாப் பீடங்களின் பீடாதிபதிகள்;

(ஐ) சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பல்மருத்துவ விஞ்ஞானங்கள் என்ற எல்லாப் பீடங்களின் பீடாதிபதிகள் ;

(ஒ) மருத்துவச் சேவைகள் என்ற வியடத்துக்குப் பொறுப்பாகவுள்ள சுகாதாரச் சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஓ) பல்மருத்துவச் சேவைகள் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள சுகாதாரச் சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி ; அத்துடன்

(ஔ) கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள சுகதாரச் சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(2) பின்வரும் ஏனைய உறுப்பினர்கள், அதாவது:-

(அ) சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவ, மருத்துவ விஞ்ஞானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள், சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் என்ற பீடங்களைச் சேர்ந்த ஒவ்வொரு பீடத்தினதும் துறைத்தலைவர்களிடையேயிருந்து அத்தகைய ஒவ்வொரு பீடத்தினதும் பீடச் சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களான அத்தகைய ஒவ்வொரு பீடத்திலுமிருந்தான ஓர் உறுப்பினர் ;

(ஆ) சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பல்மருத்துவ விஞ்ஞானப் பீடங்களைச் சேர்ந்த ஒவ்வொரு பீடத்தினதும் துறைத்தலைவர்களிடையேயிருந்து அத்தகைய ஒவ்வொரு பீடத்தினதும் பீடச் சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களான, அத்தகைய ஒவ்வொரு பீடத்திலுமிருந்தான ஓர் உறுப்பினர் ;

(இ) கல்வி, உயர் தொழில், சட்டம், விஞ்ஞானம் அல்லது நிர்வாக துறைகளில் திறமையான சேவையளித்துள்ள ஆட்களிடையேயிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஏழு உறுப்பினர்கள் ;

ஆயின், அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் குறைந்தபட்சம் மூன்று உறுப்பினர்களாவது, மருத்துவ உயர்தொழிலிலுள்ள உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினர்களிடையேயிருந்து அப்பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

(2) அதன் 7 ஆம் பந்தியில் -

(i) அப்பந்தியின் (6) ஆம், (7) ஆம் உட்பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(6) பணிப்பாளரானவர், லீவு, சுகவீனம், இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்தினால் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், பிரதிப் பணிப்பாளர் அத்தகைய கடமைகளைப் புரிதல் வேண்டும். பணிப்பாளர் பிரதிப் பணிப்பாளர் ஆகிய இருவரும் இல்லாதிருக்கையில், ஆணைக்குழுவானது, அத்தகைய இயலாமை ஏற்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்களினுள் பணிப்பாளர் பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தகுதியென அது கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும்வரை பல்கலைக்கழகப் பதிவாளர், அப்பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் பதவியில் வெற்றிடமொன்று ஏற்பட்டால், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் நிரந்தரமான நியமனமொன்று செய்யப்படும்வரை பிரதிப் பணிப்பாளர், பணிப்பாளர் பதவிக்குரிய அத்தகைய கடமைகளைப் புரிதல் வேண்டும். பிரதிப் பணிப்பாளர், பணிப்பாளர் பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராகவுள்ளவிடத்து, ஆணைக்குழுவானது, அத்தகைய இயலாமை ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள், நிரந்தரமான நியமனமொன்று செய்யப்படும்வரை பணிப்பாளர் பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்கு அது தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும்வரை பல்கலைக்கழகப் பதிவாளர், அப்பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும். ".

(3) அதன் 8 ஆம் பந்தியில் -

(i) அப்பந்தியை பந்தி 8அ என மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(ii) மீள இலக்கமிடப்பட்ட பந்தி 8அ வின் (5) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"8ஆ. (1) பிரதிப் பணிப்பாளர் தெரிவுக் குழுவொன்றினால் செய்யப்பட்ட சமர்ப்பணங்களின் அடிப்படையில் முகாமைச் சபையின் விதப்புரையின் மேல் பல்கலைக்கழகப் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர் நிறுவகத்தின் முழுநேர அலுவலரொருவராகவிருத்தலும் வேண்டும்.

(2) பிரதிப் பணிப்பாளர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய அல்லது (3) ஆம் உட்பந்தியின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவரது நியமனத் திகதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்றாண்டுக் காலப்பகுதிக்கு அல்லது அவர் தமது அறுபத்தைந்தாவது வயதைப் பூர்த்தி செய்யும்வரை, இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும். ஆளெவரும் அடுத்தடுத்துவரும் இரு காலப்பகுதிகளுக்கு மேற்படப் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்படுதலாகாது.

(3) பிரதிப் பணிப்பாளர், அந்நோக்கத்துக்காகக் கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் முகாமை சபையின் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலிரெண்டு பங்கினரினால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின் மீது பேரவையினால் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(4) பிரதிப் பணிப்பாளர், முகாமைச் சபையின் பதவிவழி உறுப்பினராகவும், கற்கைச் சபைகளுள் ஒவ்வொன்றினதும் பதவிவழி உறுப்பினராகவும் மற்றும் சிறப்புக் கூறுக் கற்கைச் சபைகளுள் ஒவ்வொன்றினதும் பதவிவழி உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும். அவர் ஒவ்வொரு நிலையியற் குழுவினதும் மற்றும் முகாமைச் சபையினால் நியமிக்கப்பட்ட வேறேதேனும் குழுவினதும் பதவிவழி உறுப்பினராகவும் இருத்தலும் வேண்டும்.

(5) பிரதிப் பணிப்பாளரின் கடமைகளும் பணிகளும் பணிப்பாளரின் கலந்தாலோசனையுடன் முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளரின் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் புரியப்படுதலும் வேண்டும்.".

(3) சபையானது குறிப்பிட்டவொரு நோக்கத்துக்காகவும் குறிப்பிட்டவொரு காலப்பகுதிக்காகவும் எவரேனுமாளை உடன் சேர்க்கலாம், ஆனால் அவ்வாறு உடன் சேர்க்கப்பட்ட ஆளெவரும் ஏதேனும் கூட்டத்தில் தேர்தலுக்காக நிற்பதற்கு அல்லது வாக்களிப்பதற்கு உரிமையைக் கொண்டிருத்தலாகாது.".

(5) அதன் 13 ஆம் பந்தியில் -

(i) அப்பந்தியை 13 (1) ஆம் பந்தியாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(ii) மீள இலக்கமிடப்பட்ட அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் "நிறுவகம் ஒரு கற்கைச் சபையைத் தாபித்தல் வேண்டும்:-" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சபையானது ஒரு கற்கைச் சபையை அல்லது ஒரு சிறப்புக் கூறுச் சபையைத் தாபித்தல் வேண்டும் :-" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(iii) அப்பந்தியின் (ந) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ப) உடலமைப்பியல் ;
(ம) அடிப்படை மற்றும் மருத்துவ விஞ்ஞானங்கள் ;
(ய) உயிரி- மருத்துவத் தெரி செய்தியறிவியல் ;
(ர) மருத்துவ நிலைய மருந்தியல் ;
(ல) இக்கட்டுநிலைக் கவனிப்பு ;
(வ) சுகாதாரத்துறை அனர்த்த முகாமை ;
(அஅ) அவசரகால மருத்துவம் ;
(அஆ) முதியோர் மருத்துவம் ;
(அஇ) மருத்துவக் கல்வி ;
(அஈ) மருத்துவக் காளானியல் ;
(அஉ) மருத்துவ நஞ்சியல் ;
(உஊ) மருத்துவ நோய் நுண்ணியல் ;
(அஎ) மூலக்கூற்று மருத்துவம் ;
(அஏ) பலதுறை நெறிசார் கற்கைகள் ;
(அஐ) உடற்றொழிலியல் ;
(அஒ) விளையாட்டுக்கள் மருத்துவம்.".

(iv) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பந்தியின் (அஒ) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய (2)ஆம், (3) ஆம் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) பெயர் குறிக்கப்பட்ட எண்ணிக்கையினரான உறுப்பினர்கள், ஏதேனும் செல்லுபடியான காரணத்தினால் ஒரு கற்கைச் சபைக்கு அல்லது சிறப்புக்கூறுச் சபைக்கு நியமிக்கப்படமுடியாத சந்தர்ப்பங்களில், அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகைமையுள்ள ஆட்களை நியமிப்பதற்குச் சபையானது தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலிரெண்டு பங்கினருக்குக் குறையாதோரினால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின் மீது கற்கைச் சபைகளை அல்லது சிறப்புக்கூறுச் சபைகளைக் கலைப்பதற்குச் சபையானது தத்துவமுடையதாதல் வேண்டும்.".

(6) அதன் 14 ஆம் பந்தியில் :-

(1) உட்பந்திகள் (1), (2), (3) மற்றும் (3அ) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(1) இலங்கையிலுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் எந்தச் சிறப்புக் கூறுக்காகக் கற்கைத்துறையொன்றைத் தாபித்துள்ளதோ அல்லது தாபித்துள்ளனவோ அந்தச் சிறப்புக்கூறு தொடர்பில் கற்கைச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய கற்கைச் சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ;

(ஆ) பிரதிப் பணிப்பாளர் ;

(இ) சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவம், மருத்துவ விஞ்ஞானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள், சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் என்ற பீடங்களுள் ஒவ்வொன்றினதும் கற்கைத் துறையைச் சேர்ந்தவர்களும், அவ்வொழுங்கு வரிசையில் பீடாதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களுமான ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர் (தலைமைதாங்கும்), பேராசிரியர், இணைப் பேராசிரியர், தலைவர் அல்லது சிரேட்ட விரிவுரையாளரொருவர் ;

(ஈ) (i) நுண்ணியிரியியல் என்ற சிறப்புக்கூறில் தவிர, பணிப்பாளரினால் தலைமை வகிக்கப்பட்ட கூட்டமொன்றில், சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவம் மருத்துவ விஞ்ஞானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள், சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் என்ற பீடங்களைச் சேர்ந்தவர்களும், அத்தகைய பீடங்களின் சிரேட்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள் (தலைமைதாங்கும்), பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், தலைவர்கள் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுமான மூன்று உறுப்பினர்கள் ;

(ii) நுண்ணுயிரியியல் என்ற சிறப்புக்கூறு தொடர்பில் :-

(அ) சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவம், மருத்துவ விஞ்ஞானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள், சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் என்ற பீடங்களைச் சேர்ந்தவர்களும், இயைபான கற்கைச் சபையின் விதப்புரையின் மேல் அவ்வொழுங்கு வரிசைப்படி பீடாதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களுமான ஒட்டுண்ணியியல் துறை ஒவ்வொன்றிலுமிருந்து ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர் (தலைமைதாங்கும்), பேராசிரியர் இணைப் பேராசிரியர், தலைவர் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர் ;

(ஆ) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கங்களின் மருத்துவம், மருத்துவ விஞ்ஞானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள், சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் என்ற பீடங்களிலிருந்து ஒட்டுண்ணியியல் சிறப்புக் கூறிலுள்ள சிரேட்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள் (தலைமைதாங்கும்), பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், தலைவர்கள் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டிய மூன்று உறுப்பினர்கள் ;

(iii) சமுதாய மருத்துவம் என்ற சிறப்புக் கூறு தொடர்பில், சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பல்மருத்துவ விஞ்ஞான பீடங்கள் ஒவ்வொன்றிலிருந்தும், அவ்வொழுங்குவரிசையின்படி பீடாதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களும், சமுதாயப் பல் மருத்துவச் சுகாதாரத் துறையிலுள்ள சமுதாயப் பல் மருத்துவப் பிரிவின் ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர் (தலைமைதாங்கும்), பேராசிரியர், இணைப் பேராசிரியர், தலைவர் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர் ;

(உ) (i) சமுதாய மருத்துவம், குடும்ப மருத்துவம் மற்றும் பொது மருத்துவத் தொழில் என்ற சிறப்புக் கூறுகளிலிருந்தான பிரதிநிதிகள் தவிர்ந்த :-

(அ) பிரதான பயிற்சி நிலையத்திலிருந்து மூன்று பிரதிநிதிகள் ;

(ஆ) பின்வரும் ப்யிற்சி நிலையங்களுள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பிரதிநிதி :-

(i) கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை ;
(ii) கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை ;
(iii) ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை ;
(iv) போதனா வைத்தியசாலை, கண்டி ;
(v) போதனா வைத்தியசாலை, காலி ;
(vi) போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் ;
(vii) போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு ; அத்துடன்
(viii) போதனா வைத்தியசாலை, அநுராதபுரம்

(ii) நுண்ணுயிரியியல் என்ற சிறப்புக்கூறு தொடர்பில், இப்பந்தியின் உட்பந்தி (1) (உ) (i) இன் கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் சேர்த்து மேலதிகமாக இலங்கைத் தேசிய வைத்தியசாலையிலிருந்து ஒரு மேலதிகப் பிரதிநிதி ; அத்துடன்

(அ) பால் ரீதியில் கடத்தப்பட்ட நோய்கள் மற்றும் அக்குயர்ட் இம்யூனிற்றி டிவிசியென்சி சின்ரோம் (AIDS) கட்டுப்பாட்டுத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து (NSACP) ஒரு பிரதிநிதி ;

(ஆ) காசநோய் மற்றும் நெஞ்சு நோய்கள் தேசிய நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து (NPTCD) ஒரு பிரதிநிதி ;

(இ) லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையிலிருந்து ஒரு பிரதிநிதி ;

(ஈ) மகரகமப் புற்றுநோய் நிறுவகத்திலிருந்து ஒரு பிரதிநிதி;

(iii) சமுதாய மருத்துவம் என்ற சிறப்புக்கூறு தொடர்பில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து சுழற்சி அடிப்படையில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அதிகபட்சம் பத்து உறுப்பினர்கள் ; அத்துடன் அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, சமுதாய மருத்துவத்திலான கற்கைச் சபையின் விதப்புரையின் மேல் சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறான தகவுடைமைக் கட்டளைக் கற்கைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் காலத்துக்குக்காலம் வேறுபடலாம் ;

(iv) குடும்ப மருத்துவம் மற்றும் பொது மருத்துவத் தொழில் என்ற சிறப்புக்கூறு; தொடர்பில் :-

(அ) நிறுவகத்தின் பணிப்பாளரினால் தலைமை வகிக்கப்பட்ட தகவுடைய எல்லாப் பயிற்சியளிப்போரினதும் கூட்டமொன்றில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், அறுபத்தைந்து (65) வயதுக்குக் குறைந்தவர்களாக உள்ளவர்களுமான, பயிற்சிக் கூறுகளிலிருந்து ஒன்பது பயிற்சியளிப்போர் ;

(ஆ) விரிவுரைகளை நடாத்துகின்றவர்களும் குடும்ப மருத்துவத்திலான பயிற்சியின் ஏனைய கல்விசார் செயற்பாடுகளுக்குப் பங்களிப்பவர்களுமான சிரேட்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள் (தலைமைதாங்கும்), பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், தலைவர், சிரேட்ட விரிவுரையாளர்கள் என்போர்களிடையேயிருந்து கற்கைச் சபையொன்றின் விதப்புரையின் மேல் பீடாதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட் வேண்டியவர்களும், சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்களுமான மருத்துவம் அல்லது மருத்துவ விஞ்ஞானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள், சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் என்ற பீடங்களுள் ஒவ்வொன்றிலிருந்தும் ஓர் உறுப்பினர் ;

(v) சட்ட மருத்துவம் என்ற சிறப்புக்கூறு தொடர்பில், கற்கைச் சபையின் உறுப்பினர்களாகவிருப்பதற்குத் தகவுடையோராக வருவதற்கு இப்பந்தியின் (3) ஆம் உட்பந்தியின் கீழ் சிறப்பறிஞர்களினால் திருப்தி செய்யப்படவேண்டிய விதிக்கப்பட்ட கட்டளைக் கற்களை நிறைவேற்றுகின்ற சட்ட மருத்துவ அலுவலகங்கள், நிறுவகங்கள், மற்றும் பயிற்சி நிலையங்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள சிறப்பறிஞர்களிடையேயிருந்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய பத்து சிறப்பறிஞர்கள் ;

(vi) பெண்ணோயியல் மற்றும் மகப்பேற்றியல் என்ற சிறப்புக்கூறு தொடர்பில் –

(அ) கொழும்பு, டி சொய்சா மகப்பேற்று வைத்தியசாலையின் ஆலோசகப் பெண்ணோயியலாளர்கள் மற்றும் மகப்பேற்றியலர்கள் என்போர்களிடையேயிருந்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய, ஒன்று அல்லது இரண்டு பயிற்சிக் கூறுகளின் விடயத்தில் ஒரு பிரதிநிதி, அல்லது மூன்று அல்லது நான்கு கூறுகளின் விடயத்தில் இரண்டு பிரதிநிதிகள் அல்லது ஐந்து அல்லது ஆறு கூறுகளின் விடயத்தில் மூன்று பிரதிநிதிகள் ;

(ஆ) கொழும்பு, காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் ஆலோசகப் பெண்ணோயியலர்கள் மற்றும் மகப்பேற்றியலர்கள் என்போர்களிடையேயிருந்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய, ஒன்று அல்லது இரண்டு பயிற்சிக் கூறுகளின் விடயத்தில் ஒரு பிரதிநிதி, அல்லது மூன்று அல்லது நான்கு கூறுகளின் விடயத்தில் இரண்டு பிரதிநிதிகள், அல்லது ஐந்து அல்லது ஆறு கூறுகளின் விடயத்தில் மூன்று பிரதிநிதிகள் ;

(vii) நோயியல் என்ற சிறப்புக்கூறு தொடர்பில், உப்பந்தி (1) (உ) (i) (ஆ) இல் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையுடன் சேர்த்து மகரகம புற்றுநோய் நிறுவகத்திலிருந்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஓர் ஆலோசகக் குருதியியலர் ;

(ஊ) (i) இயைபான உயர்தொழில்சார் குழுவின் தலைவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களும் குடும்ப மருத்துவத்தில் அல்லாதவர்களான பயிற்சியளிப்போராகவுள்ளவர்களுமான இரண்டு உறுப்பினர்கள் ; அவர்களுள் -

(அ) ஓர் உறுப்பினர் சுகாதார அமைச்சைச் சேர்ந்தவராகவிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஓர் உறுப்பினர் சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பணியாட்டொகுதியைச் சேர்ந்தவராகவிருத்தல் வேண்டும் ;

(ii) குடும்ப மருத்துவம் மற்றும் பொது மருத்துவத்தொழிலின் உயர்தொழில்சார் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பயிற்சியாளர்களாகவுள்ள இரண்டு உறுப்பினர்கள்.

(2) இலங்கையிலுள்ள பல்கலைக்கழகமெதுவும் எந்தச் சிறப்புக் கூறுக்காகக் கற்கைத்துறையொன்றைத் தாபிக்கவில்லையோ அந்தச் சிறப்புக்கூறு தொடர்பில் கற்கைச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய கற்கைச் சபை, (3) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ;

(ஆ) பிரதிப் பணிப்பாளர் ;

(இ) சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவ அல்லது மருத்துவ விஞ்ஞானங்கள் என்ற பீடங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் சிரேட்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர்கள் என்போர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர் ;

(ஈ) (i) கதிரியக்கவியல், நோயியல், மருத்துவகக் கழலையாக்கல் ஆய்வியல் மற்றும் மருத்துவ நிர்வாகம் என்ற சிறப்புக் கூறுகள் தவிர்ந்த -

(அ) பிரதான பயிற்சி நிலையத்திலிருந்து மூன்று பிரதிநிதிகள் :-

(ஆ) பின்வரும் பயிற்சி நிலையங்களுள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பிரதிநிதி :-

(i) கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை ;
(ii) கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை ;
(iii) ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை ;
(iv) போதனா வைத்தியசாலை, கண்டி ;
(v) போதனா வைத்தியசாலை, காலி ;
(vi) போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் ;
(vii) போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு ; அத்துடன்
(viii) போதனா வைத்தியசாலை, அநுராதபுரம்.

(ii) கதிரியக்கவியற் சிறப்புக்கூறு தொடர்பில், உட்பந்தி (2) (ஈ) (i) இன் கீழான பிரதிநிதிகளுடன் சேர்த்து மேலதிகமாக, லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையிலிருந்து ஒரு மேலதிகப் பிரதிநிதி ;

(iii) மருத்துவக் கழலையாக்கல் ஆய்வியற் சிறப்புக்கூறு தொடர்பில், பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பின்வரும் முறையிலான பன்னிரெண்டு பிரதிநிதிகள் :-

(அ) உட்பந்தி (2) (ஈ) (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களிலிருந்து ஒன்பது பேர் ; அவர்களுள் மூவரேனும் பிரதான பயிற்சி நிலையத்திலிருந்தாதல் வேண்டும் , அதாவது மகரகம புற்றுநோய் நிறுவகம் ;

(ஆ) அநுராதபுரம் மற்றும் பதுளை பொது வைத்தியசாலைகள் ஒவ்வொன்றிலுமிருந்து இரண்டு மருத்துவகக் கழலையாக்கல் ஆய்வியலர்கள் ;

(இ) சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய தனியார் துறையிலிருந்தான ஒரு மருத்துவகக் கழலையாக்கல் ஆய்வியலர் ;

(iv) மேக நோயியல் சிறப்புக்கூறு தொடர்பில், இப்பந்தியின் உட்பந்தி (1) (உ) (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களிலிருந்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒன்பது பிரதிநிதிகள் ; அவர்களுள் மூன்று பேரேனும் பின்வரும் நிலையங்களிலிருந்தாதல் வேண்டும் :-

(அ) மகரகம, புற்றுநோய் நிறுவகம் ; அத்துடன்

(ஆ) பால் ரீதியில் ஊடுகடத்தப்படுகின்ற நோய்கள் பிணியாய்வு நிலையமாகிய (இதனகத்துப்பின்னர் “எஸ். ரீ. டி. பிணியாய்வு நிலையம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) மத்திய எஸ். ரீ. டி. பிணியாய்வு நிலையம்;

(v) சரும நோயியற் சிறப்புக்கூறு தொடர்பில், பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் ஆலோசக சரும நோயியலர் ;

(vi) மருத்துவ நிர்வாகம் என்ற சிறப்புக்கூறு தொடர்பில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பயிற்சிக் கூறுகளிலிருந்தான ஒன்பது பிரதிநிதிகள் ;

(3) (அ) (1) ஆம், (2) ஆம் உட்பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட கற்கைச் சபையின் அத்தகைய எல்லா உறுப்பினர்களும் பயிற்சியாளர்களாக இருத்தல் வேண்டும். பயிற்சியாளரொருவர் சபைச் சான்றுப்படுத்துகைக்குப் பின்னர் மூன்றாண்டு அனுபவங்கொண்ட ஆளொருவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் விடயத்திலும், சுகாதார அமைச்சிலும் இயைபான கற்கைச் சபையின் விதப்புரைகளின் மேல் சபையினால் தீர்மானிக்கப்பட்ட இயைபான துறையில் முனைப்பான சேவையிலிருத்தலும் வேண்டும் ; அத்துடன் குடும்ப மருத்துவம் மற்றும் பொது மருத்துவத்தொழிலின் விடயத்தில் அறுபத்தைந்து (65) வயதுக்குக் குறைவானவராகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) ஒரு கற்கைச் சபையின் கல்விசார் துறையின் நியமித்தர்கள், கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் கலந்தாலோசனையுடன் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பீடங்களின் முறையான பீடாதிபதிகளினால் தெரிவு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர்களின் பெயர்கள் நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும் ;

(இ) ஒரு பயிற்சி நிலையத்திலிருந்து அல்லது கூறிலிருந்து சிறப்பறிஞரொருவர் தெரிவு செய்யப்படவுள்ள சந்தர்ப்பங்களில், முறையே அந்நிலையத்தின் அல்லது கூறின் பணிப்பாளரினால் அல்லது தலைவரினால் தலைமை வகிக்கப்பட்டவொரு கூட்டம், இப்பந்தியின் உட்பந்தி (3) (அ) இல் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்தி செய்கின்ற சிறப்பறிஞர்களுடன் நடாத்தப்படுதல் வேண்டும். அத்தகைய தெரிவு செய்யப்பட்ட சிறப்பறிஞரின் பெயர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் சார்பில் வைத்தியசாலையின் பணிப்பாளரினால் அல்லது நிறுவகத்தின் தலைவரினால் நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3அ) பல்மருத்துவச் சிறப்புக் கூறு தொடர்பில் கற்கைச் சபை தாபிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய கற்கை சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ;

(ஆ) பிரதிப் பணிப்பாளர் ;

(இ) இயைபான கற்கைப் பிரிவின் விதப்புரையின் மேல், சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பல்மருத்துவ விஞ்ஞானங்கள் பீடங்களின் பீடாதிபதிகளினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பின்வரும் கற்கைநெறிப் பிரிவுகளின் ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர் (தலைமைதாங்கும்), பேராசிரியர், இணைப் பேராசிரியர், தலைவர் அல்லது சிரேட்ட விரிவுரையாளர் :-

(i) வாய்சார் அறுவைச் சிகிச்சை;

(ii) வாய்சார் மருத்துவம் ;

(iii) வாய்சார் நோயியல் ;

(iv) மீளமைப்புப் பற் சிகிச்சை ;

(v) செயற்கைப் பற் சிகிச்சை ;

(vi) சமுதாயப் பற் சிகிச்சை ;

(vii) பல் என்புவியல் ;

(viii) குழந்தைப் பற் சிகிச்சையியல் ;

(ix) பல்சார்ந்த நோயியல் ;

(x) அடிப்படை விஞ்ஞானங்கள் ;

(ஈ) சுகாதார அமைச்சின் ஆலோசகர்களுளிருந்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய பத்து சிறப்பறிஞர்கள் ; அவர்களுள்-

(i) மூன்று சிறப்பறிஞர்கள், கொழும்பு வைத்தியசாலைகள் தொகுதி, பல்மருத்துவ நிறுவகத்திலிருந்தாதல் வேண்டும் ; வாய்சார் மற்றும் மேல் தாடை - முகம் சார்ந்த அறுவைச் சிகிச்சை, பல் என்புவியல் மற்றும் மீளமைப்புப் பற் சிகிச்சை என்ற சிறப்புக் கூறுகளிலிருந்து ஒன்றை ஒவ்வொருவரும் பிரதிநிதித்துவப்படுத்துதல் வேண்டும் ;

(ii) மகரகம புற்றுநோய் நிறுவகத்திலிருந்து ஒரு சிறப்பறிஞர் ;

(iii) போதனா வைத்தியசாலைகளிலிருந்து நான்கு சிறப்பறிஞர்கள் ;

(iv) பொது அல்லது ஆதார வைத்தியசாலைகளிலிருந்து இரண்டு சிறப்பறிஞர்கள் ;

(உ) இலங்கைப் பல்மருத்துவ மற்றும் வாய் மருத்துவவியற் கல்லூரியிலிருந்து பயிற்சியாளர்களாகவுள்ள மூன்று உறுப்பினர்கள் ;

(ஊ) இலங்கைப் பொதுப் பல்மருத்துவத் தொழிலர்கள் கல்லூரியிலிருந்து ஓர் உறுப்பினர் ;

ஆயின், எவ்வாறாயினும், ஒரு பல்கலைக்கழகத்தை அல்லது சுகாதார அமைச்சின் பயிற்சி நிலையத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிறப்பறிஞர்கள், அத்தகைய உறுப்பினர்கள் எந்தப் பதவியின் பயனைக்கொண்டு பல்மருத்துவ அறுவைச் சிகிச்சையில் கற்கைச் சபையின் உறுப்பினர்களாகவிப்பதற்குத் தகவுடையோராக வந்தனரோ அந்தப் பதவியை அவர்கள் வகிக்கும் காலம்வரை பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர் பல்கலைக்கழகத்தை அல்லது நிலையத்தை விட்டு நீங்குவதன் மேல் அல்லது அவர் ஓய்வுபெறுவதன் மேல் உறுப்பினராக இல்லாதொழிதலும் வேண்டும். ” ;

(2) பந்தி (3அ) என்பதை உடனடுத்து (3ஆ), (3இ) மற்றும் (3ஈ) என்னும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(3ஆ) பின்வரும் ஆட்களைக் கொண்டிருக்க வேண்டிய விளையாட்டுக்கள் மருத்துவத்திலான சிறப்புக் கூறு தொடர்பில் கற்கைச் சபையொன்றை சபையானது தாபித்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ;

(ஆ) பிரதிப் பணிப்பாளர் ;

(இ) இலங்கை விளையாட்டுக்கள் மருத்துவக் கழகத்தினால் அதன் உறுப்பாண்மையிலிருந்து பெயர் குறித்து நியமிக்கப்படவேண்டிய நான்கு உறுப்பினர்கள் ;

(ஈ) விளையாட்டுக்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினது விளையாட்டுக்கள் மருத்துவக்கூறின் தலைவர் ;

(உ) சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவம், மருத்துவ விஞ்ஞானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள் சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் என்ற பீடங்களிலிருந்து, பாடம் பற்றிய அறிவைக் கொண்ட அத்தகைய பீடங்களின் சிரேட்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள் (தலைமைதாங்கும்), பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர்கள் என்போர்களிடையேயிருந்து அத்தகைய ஒவ்வொரு பீடத்தினதும் பீடச் சபையினால் தெரிவு செய்யப்பட்டவர்களும் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுமான பீடம் ஒவ்வொன்றுக்கும் ஓர் உறுப்பினர்;

(ஊ) சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பல்மருத்துவ விஞ்ஞானங்கள் என்ற பீடங்களிலிருந்து பாடம் பற்றிய அறிவைக்கொண்ட அத்தகைய பீடத்தின் சிரேட்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள (தலைமைதாங்கும்), பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர்கள் என்போர்களிடையேயிருந்துயிருந்து அத்தகைய ஒவ்வொரு பீடத்தினதும் பீடச் சபையினால் தெரிவு செய்யப்பட்டவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுமான பீடம் ஒவ்வொன்றுக்கும் ஓர் உறுப்பினர் ;

(எ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய சுகாதார அமைச்சின் விளையாட்டுக்கள் மருத்துவ ஆலோசகர்களிடையேயிருந்து ஐந்து பிரதிநிதிகள் ;

(ஏ) கல்வி அமைச்சின் உடலியற் கல்வியின் தலைவர் ; அத்துடன்

(ஐ) விளையாட்டுக்கள் மருத்துவம் என்ற சிறப்புக் கூறுக்கு இயைபான துறைகளில் திறமையான சேவைகளையளித்துள்ள ஆட்களிடையேயிருந்து சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

(ஒ) (3இ) சபையானது பின்வரும் ஆட்களைக் கொண்டிருக்கவேண்டிய பலதுறை நெறிசார் கற்கை நெறிகளிலான கற்கைச் சபையொன்றைத் தாபித்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ;

(ஆ) பிரதிப் பணிப்பாளர் ;

(இ) முறையான கற்கைச் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களும், பல்கலைக்கழகங்களின் கல்விசார் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களுமான உணர்வகற்றவியல், மருத்துவம், குழந்தை மருத்துவவியல், அறுவைச் சிகிச்சை, பெண்யோயியலும் மகப்பேற்றியலும் என்பவற்றிலான கற்கைச் சபைகளிலிருந்து ஒவ்வொன்றுக்கும் ஓர் உறுப்பினர் ;

(ஈ) முறையான கற்கைச் சபைகளினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களும் போதனா வைத்தியசாலைகளின் பயிற்சிக் கூறுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களுமான உணர்வகற்றவியல், மருத்துவம், குழந்தை மருத்துவவியல், அறுவைச் சிகிச்சை, பெண்ணோயியலும் மகப்பேற்றியலும் என்பவற்றிலான கற்கைச் சபைகளிலிருந்து ஒவ்வொன்றுக்கும் ஓர் உறுப்பினர் ;

(உ) பீடச் சபையினால் தெரிவு செய்யப்படவேண்டிய அல்லது தேர்ந்தெடுக்கப்படவேண்டிய, சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவம், மருத்துவ விஞ்ஞானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள், சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் என்ற பீடங்களிலிருந்து ஒவ்வொன்றுக்கும் ஒரு நியமத்தர் ;

(ஊ) பந்தி 15 (3இ) என்பதன்படி அமைத்துருவாக்கப்பட்ட இயைபான சிறப்புக்கூறுச் சபையின் தவிசாளர்;

(எ) சுகாதாரத்துடன் தொடர்புபட்ட பகிரங்க அல்லது தனியார் துறை நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற அல்லது சேவையாற்றியுள்ள உயர் திறமை கொண்ட சிரேட்ட கல்விமான்கள் அல்லது ஆலோசகர்களிடையேயிருந்து சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள் ;

(ஏ) குறித்தவொரு நோக்கத்துக்காகவும் காரணத்துக்காகவும் பலதுறை நெறிசார் கற்கை நெறிகளில் கற்கைச் சபையினால் விதந்துரைக்கப்பட்டவாறு கற்கை நெறிகளின் அல்லது பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் தேவைகளைப் பொறுத்து உடன் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் அத்தகைய உடன் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் தேர்தலுக்கு நிற்கவோ அல்லது வாக்களிக்கவோ அனுமதிக்கப்படுதலாகாது.

(3ஈ) சபையானது பின்வரும் ஆட்களைக் கொண்டிருக்கவேண்டிய அடிப்படை மற்றும் மருத்துவ விஞ்ஞானங்களிலான கற்கைச் சபையொன்றைத் தாபித்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ;

(ஆ) பிரதிப் பணிப்பாளர் ;

(இ) பீடத்தின் பீடாதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும், பாடம் பற்றிய அறிவைக் கொண்டுள்ளவருமான சட்டத்தின் கீழ்த்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவம், மருத்துவ விஞ்ஞானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள் மற்றும் சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் ஆகிய தனித்தனி பீடங்களில் இருந்தும் ஒரு சிரேஷ்ட பேராசிரியர், இணைப்பேராசிரியர்கள் அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர் ;

(ஈ) பீடத்தின் பீடாதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரும் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவம், மருத்துவ விஞ்சானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள் சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் ஆகிய தனித்தனி பீடங்களிலிருந்தும் தொடர்புடைய கல்விசார் துறைகளை சேர்ந்த ஒரு சிரேஷ்ட பேராசிரியர் பேராசிரியர் (பதவி), இணைப்பேராசிரியர், தலைவர் அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர் ;

(உ) இப்பந்தியின் உட்பந்தி (3இ), (ஈ) இன்படி அமைத்துருவாக்கப்படவேண்டிய இயைபான சிறப்புக்கூறின் தவிசாளர்;

(ஊ) பாடம் பற்றிய அறிவைக்கொண்டுள்ள பல்கலைக்கழகக் கல்விமான்களை அல்லது தொடர்புபட்டவொரு கற்கை நெறியில் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தின்றவர்களும், சபையினால் நியமிக்கப்பட வேண்டியவர்களுமான மூன்று உறுப்பினர்கள் ;

(எ) அடிப்படை மற்றும் மருத்துவ விஞ்ஞானங்கள் என்ற சிறப்புக் கூறுகளுடன் தொடர்புபட்ட முறையான உயர்தொழில்சார் குழு, கழகம் மற்றும் சங்கத்திலிருந்து ஒவ்வொன்றுக்கும் இரண்டு உறுப்பினர்கள் ;

(3) அதன் (5) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(5) (அ) கற்கைச் சபையொன்றின் எவரேனும் உறுப்பினர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் அவரது காலம் முடிவுறுமுன்னர் பதவியை வறிதாக்கினால், அவரது அடுத்துறுபவர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் ;

ஆயின், மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஒவவோர் உறுப்பினரும், அவர் எந்த அந்தஸ்தின் அல்லது உறுப்பாண்மையின் பயனைக் கொண்டு சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமிக்கப்படுவதற்குத் தகுவுடையவராகவிருந்தாரோ அந்த அந்தஸ்தை அல்லது உறுப்பாண்மையை அவர் வைத்திருக்கும் காலம்வரை பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், பயிற்சிக்கூறு, நிலையம், பல்கலைக்கழகப் பீடம் அல்லது கற்கைத் துறையிலிருந்து நீங்குவதன் மேல், இளைப்பாறுவதன் மேல் அல்லது இடமாற்றப்படுவதன் மேல் உறுப்பினரொருவராக இல்லாதொழிதலும் வேண்டும். குடும்ப மருத்துவத்தின் விடயத்தின் அறுபத்தைந்து (65) வயதை அடைவதன் மேல் அவர் உறுப்பினரொருவராக இல்லாதொழிதல் வேண்டும்.

(ஆ) கற்கைச் சபையொன்றின் எவரேனும் உறுப்பினர், பணிப்பாளருக்கு முகவரியிட்டனுப்பப்படும் அவரது கைப்பட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து நீங்கலாம் ;

(இ) வராமைக்கான முன் அனுமதியின்றிச் சபையின் அடுத்தடுத்து நடைபெறும் மூன்று கூட்டங்களுக்கு வருகைதரத் தவறுகின்ற ஒரு கற்கைச் சபையின் எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர், சபையின் உறுப்பினரொருவராகத் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், விளைகின்ற வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதியான ஆளொருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையைப் பணிப்பாளர் எடுத்தலும் வேண்டும் .";

(4) அதன் (7) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(7) (அ) தோதான கற்கைச் சபையின் விதப்புரையின் மேல் சபையினால் நியமிக்கப்பட்ட கற்கைச் சபையின் உறுப்பினரொருவராக இருக்கவேண்டிய செயலாளரொருவரை ஒவ்வொரு கற்கைச் சபையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) செயலாளரின் பதவிக்காலம் கற்கைச் சபையின் பதவிக்காலமாக இருத்தல் வேண்டும்.".

(5) அதன் (8) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(8) (அ) (1) ஆம் உட்பந்தியின் கிழ் அமைத்துருவாக்கப்பட்ட ஏதேனும் கற்கைச் சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் உடன் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் எவரேனுமிருப்பின் அவர்கள் நீங்கலாக மொத்த உறுப்பாண்மையின் நான்கிலொரு பங்கினராதல் வேண்டும்.

(ஆ) (2) ஆம் உட்பந்தியின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ஏதேனும் கற்கைச் சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் உடன் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் எவரேனுமிருப்பின் அவர்கள் நீங்கலாக மொத்த உறுப்பாண்மையின் நான்கிலொரு பங்கினராதல் வேண்டும். ".

(7) அதன் 15 ஆம் பந்தியில் -

(i) அதன் (2) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3) சபையின் அங்கீகாரத்துடனும் இயைபானவொரு கற்கைச் சபையின் விதப்புரையின் மேலும் நிறுவகமானது, பொதுவான அல்லது உபசிறப்புக் கூறுகள் தொடர்பில் சிறப்புக்கூறுச் சபைகளைத் தாபித்தல் வேண்டும் :-

(அ) ஒவ்வொரு சிறப்புக்கூறுச் சபையும் மருத்துவத்திலான சிறப்புக்கூறுகள் தொடர்பில் நிறுவகத்தினால் தாபிக்கப்பட்ட இயைபானவொரு கற்கைச் சபையின் பொதுவான பணிப்புகளின் கீழ் பணியாற்றுதல் வேண்டும் ;

(ஆ) எந்தப் பொதுவான அல்லது உபசிறப்புக் கூறில் இயைபானவொரு கற்கைச் சபையின் பொதுவான பணிப்பின் கீழ் போதனை, கல்வி, பயிற்சி மற்றும் மதிப்பீடு நிறைவேற்றப்படுகின்றதோ அந்தப் பொதுவான அல்லது உப சிறப்புக்கூறு தொடர்பில் சிறப்புக்கூறுச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய சிறப்புக்கூறுச் சபை பின்வருமாறு பத்து பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) பணிப்பாளர்;

(ii) பிரதிப் பணிப்பாளர் ;

(iii) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இயைபான கற்கைச் சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எட்டு உறுப்பினர்கள் ; அவர்களுள் ஐந்து உறுப்பினர்கள், இயைபான துறையில் சபைச் சான்றுப்படுத்துகைக்குப் பின்னர் ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை உடைய சிறப்பறிஞர்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன், மூன்று உறுப்பினர்கள், இயைபான துறையில் மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரையிலான சபைச் சான்றுப்படுத்துகைக்குப் பின்னரான அனுபவத்தை உடைய சிறப்பறிஞர்களாக இருத்தலும் வேண்டும் ;

ஆயின், மேலே குறிப்பீடு செய்யப்பட்ட எட்டு உறுப்பினர்களுள் ஏழு பேர், சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுள் எவற்றிலும், அல்லது சுகாதார அமைச்சில் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளில் அல்லது சுகாதாரத்துடன் தொடர்புபட்ட பகிரங்க நிறுவனங்களில் தொழிலுக்கமர்த்தப்படுகின்றவர் களிலிருந்து அல்லது தொழிலுக்கமர்த்தப் பட்டிருந்தவர்களிலிருந்து பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒருவர் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட தனியார் துறை நிறுவனத்தி லிருந்தானவராதலும் வேண்டும் ;

(iv) இரண்டு உறுப்பினர்கள், இயைபான துறைகளில் சபைச் சான்றுப்படுத்துகைக்குப் பின்னர் ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட சிறப்பறிஞர்களிடையேயிருந்து சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும் ;

(இ) ஒவ்வொரு சிறப்புக்கூறுச் சபையும் ஒரு தவிசாளரையும் செயலாளரையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர்கள் ஒரு சிறப்புக்கூறுச் சபையின் உறுப்பாண்மையிடையேயிருந்து அதன் உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்படுதலும் வேண்டும் ;

(ஈ) ஒரு சிறப்புக்கூறுச் சபையின் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண், உடன் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் எவரேனுமிருப்பின் அவர்கள் நீங்கலாக மொத்த உறுப்பாண்மையின் நான்கிலொரு பங்கினராதல் வேண்டும்.

(உ) சிறப்புக்கூறுச் சபையொன்றின் பதவிக்காலம், கற்கைச் சபையின் பதவிக்காலம் முடிவுறும் திகதியன்று முடிவுறுதல் வேண்டும்;

(ஊ) ஒவ்வொரு சிறப்புக்கூறுச் சபையும் ஆண்டொன்றுக்குக் குறைந்தபட்சம் ஆறு கூட்டங்களை நடாத்துதல் வேண்டும்;

(எ) ஒவ்வொரு சிறப்புக்கூறுச் சபையும், குறிப்பிட்டவொரு நோக்கத்துக்காகவும் மற்றும் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காகவும் சிறப்பறிஞர்களை உடன் சேர்க்கும்படி விதந்துரைக்கலாமென்பதுடன், அவ்வாறு உடன் சேர்க்கப்பட்ட ஆளெவரும் சிறப்புக்கூறுச் சபையின் ஏதேனும் கூட்டத்தில் தேர்தலுக்கு நிற்பதற்கான அல்லது வாக்களிப்பதற்கான உரிமையைக் கொண்டிருந்தலுமாகாது; அத்துடன்

(ஏ) சம்பந்தப்பட்ட இயைபான கற்கைச் சபையின் உறுப்பினராகவிராத சிறப்புக்கூறுச் சபையின் உறுப்பினரொருவர் இயைபான கற்கைச் சபையின் கூட்டமொன்றில் சிறப்புக்கூறுச் சபை தொடர்பான கருமங்களை முன்வைப்பதற்குக் குறித்தளிக்கப்படும் சந்தர்ப்பங்களில், அத்தகைய நியமத்தர் அக்குறிப்பிட்ட முன்வைப்புக்கு முறையாக உடன் சேர்க்கப்பட்டுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய முன்வைப்பு பூர்த்தியாவதன் மேல் அவர் உடன் சேர்க்கப்பட்ட உறுப்பினரொருவராக இல்லாதொழிவார்.

(4) சட்டத்தின், கட்டளைச் சட்டத்தின் அல்லது தோதான ஏதேனும் சாதனத்தின் ஏற்பாடுகளுக்கும், கற்கைச் சபையின் பொதுவான பணிப்புகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, ஒவ்வொரு சிறப்புக்கூறுச் சபையும் பின்வரும் பணிகளைப் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(அ) ஒரு பொதுவான அல்லது உப சிறப்புக்கூறு தொடர்பாகக் கற்கைநெறிகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், பாடவிதானங்கள் மற்றும் பரீட்சைகள் சம்பந்தமான எல்லாக் கருமங்கள் மீதும் இயைபான கற்கைச் சபைக்கு விதப்புரைகளைச் சமர்ப்பித்தலும் அறிக்கையிடுதலும்;

(ஆ) சிறப்புக்கூறுடன் தொடர்புபட்ட ஒரு விசேட பாடம் ஏதேனுமிருப்பின், அதனைக் கவனத்திற் கொள்ளும் மற்றும் அதன் மீது அறிக்கையிடும் நோக்கத்துக்காகச் சிறப்புக்கூறுச் சபையின் உறுப்பினர்களல்லாத ஆட்களை உள்ளடக்கக்கூடிய உபகுழுக்களை இயைபானபோது நியமிப்பதனை விதந்துரைத்தல்;

(இ) கற்கை நெறிகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகளுக்குப் பயிற்சிபெறுநர்களைச் சேர்ப்பதற்கான தேவைப்பாடுகளைக் கற்கைச் சபைக்கு விதந்துரைத்தல்;

(ஈ) கற்கைநெறிகளும் பரீட்சைகளும் தொடர்பான வரைவு ஒழுங்குவிதிகளைக் கற்கைச் சபைக்குச் சமர்ப்பித்தல்;

(உ) அத்தகைய பணிகளை ஆளுகின்ற பொதுவான விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இசைந்தொழுக ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் ஏற்றங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமானவர்களான அத்தகைய ஆட்களைக் கற்கைச் சபைக்கு விதந்துரைத்தல்; அத்துடன்

(ஊ) சம்பந்தப்பட்ட கற்கைச் சபையினால் அல்லது சபையினால் சிறப்புக்கூறுச் சபைக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற கருமங்கள் மீது அறிக்கையிடுதல்.".

(8) அதன் 25 ஆம் பந்தியில் -

(i) "மருத்துவத்திலான சிறப்புக்கூறு" என்ற வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"மருத்துவத்திலான சிறப்புக்கூறு" என்பது, உணர்வகற்றவியல், உடலமைப்பியல், அடிப்படை மற்றும் மருத்துவ விஞ்ஞானங்கள், உயிரி - மருத்துவத் தெரி செய்தியறிவியல், மருத்துவகக் கழலையாக்கல் ஆய்வியல், மருத்துவக மருந்தியல், சமுதாய மருத்துவம், இக்கட்டுநிலைக் கவனிப்பு, பல்மருத்துவ அறுவைச் சிகிச்சை, சரும நோயியல், சுகாதாரத்துறை அனர்த்த முகாமை, அவசர மருத்துவம், குடும்ப மருத்துவமும் பொது மருத்துவத்தொழிலும், சட்ட மருத்துவம், முதியோர் மருத்துவம், சுகாதார விஞ்ஞானங்கள், மருத்துவம், மருத்துவ நிர்வாகம், மருத்துவக்கல்வி, மருத்துவக்காளானியல், மருத்துவ நச்சியல், மருத்துவ நோய்நுண்ணியல், நுண்ணுயிரியல், மூலக்கூற்று மருத்துவம், பலதுறை நெறிசார் கற்கைகள், பெண்ணோயியலும் மகப்பேற்றியலும், கண் மருத்துவவியல், செவி-மூக்கு-தொண்டையியல், குழந்தை மருத்துவவியல், ஒட்டுண்ணியியல், நோயியல், உடற்றொழிலியல், உளமருத்துவவியல், கதிரியக்கவியல், விளையாட்டுக்கள் மருத்துவம், அறுவைச்சிகிச்சை, மேகநோயியல் அல்லது காலத்துக்குக்காலம் நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் சிறப்புக்கூறு என்று பொருளாகும்;

"பிரதான பயிற்சி நிலையம்" என்பது, ஒரு கற்கைச் சபையின் ஏலவேயுள்ள உறுப்பாண்மைக்கு நியாயமான அறிவித்தலுடன் ஆனால் அதற்குப் பங்கமின்றி, சம்பந்தப்பட்ட கற்கைச் சபையின் விதப்புரையின் மேல் சபையினால் குறித்துரைக்கப்பட்டவொரு சிறப்புக்கூறில் போதனைகளையும் பயிற்சியையும் வழங்குகின்ற தலைமைப் பயிற்சிக்கூறாக அல்லது நிலையமாகப் பெயர்குறிக்கப்பட்டுள்ளவொரு பயிற்சி நிலையம் என்றுபொருளாகும்.

8-550

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.